


**02. 09. 2025**

**தலைப்பு செய்திகள்**

1. **உலகின் வேகமாக வளர்ச்சிப்பெறும் பொருளாதார நாடாக** இந்தியா திகழ்வதில், வங்கிகள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

2. **21-வது நூற்றாண்டின் மிகப்பெரிய ஆற்றலாக செமி** கண்டக்டர் துறை திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.

3. **ஆசிரியர் தகுதி தேர்வு TET தொடர்பான** உச்சநீதிமன்ற தீர்ப்பின் விவரங்கள் முழுமையாக வந்த பின்னர் சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிக்கப்படும் என்று மாநில அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி குறிப்பிட்டுள்ளார்.

4. **சென்னை குத்தம்பாக்கம் புதிய பேருந்து நிலையம்** நவம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று, சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைவர் திரு.சேகர்பாபு அறிவித்துள்ளார்.

5. **சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டியில்** ஆடவர் முதல் சுற்றில் இந்தியாவின் Ginpaul Sonna, இங்கிலாந்தின் Yuehang Wang-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

**இனி விரிவான செய்திகள்**

❖❖❖❖❖❖❖

**குடியரசு தலைவர்**

**உலகின் வேகமாக வளர்ச்சிப்பெறும் பொருளாதார** நாடாக இந்தியா திகழ்வதில், வங்கிகள் முக்கிய பங்காற்றுவதாக குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு பெருமிதம் தெரிவித்துள்ளார்.

சென்னையில் சிட்டி யூனியன் வங்கியின் 120-வது நிறுவனநாள் விழாவில் இன்று உரையாற்றிய அவர் கிராமப்புற மக்கள் வளர்ச்சிக்கு வங்கிகள் முக்கிய பங்களிப்பு வழங்குவதாக எடுத்துரைத்தார்.

வங்கிகள் கடன் வழங்குவதன் மூலம் தொழில்துறையில் வேலைவாய்ப்பு அதிகரிப்பதாக அவர் கூறினார்.

மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் இந்நிகழ்ச்சியில் பங்கேற்றுள்ளார்.

முன்னதாக சென்னை விமான நிலையத்திற்கு வருகை தந்த குடியரசு தலைவர் திருமதி. திரௌபதி முர்முவை தமிழக ஆளுநர் திரு. ஆர்.என்.ரவி, துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் உள்ளிட்டோர் அன்புடன் வரவேற்றனர்.

2 நாள் அரசுமுறை பயணமாக தமிழகம் வந்துள்ள குடியரசு தலைவர், நாளை பிற்பகல் திருவாரூர் மத்திய பல்கலைக்கழகத்தின் 10-வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்கிறார்.

அதனைத் தொடர்ந்து நாளைமாலை திருச்சி ஸ்ரீரங்கம் அரங்கநாதர் சுவாமி திருக்கோவிலில் சுவாமி தரிசனம் மேற்கொள்கிறார்.

குடியரசு தலைவரின் வருகையை முன்னிட்டு திருச்சி, திருவாரூர் மாவட்டங்களில் இன்றும் நாளையும் ட்ரோன் பறக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதனிடையே பாதுகாப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக திருச்சி ஸ்ரீரங்கம் ரெங்கநாதர் திருக்கோவிலுக்கு நாளை மதியம் ஒருமணி வரை மட்டுமே பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்ய அனுமதிக்கப்படுகிறார்கள்.

❖❖❖❖❖❖❖

பிரதமர்

**21-வது நூற்றாண்டின் மிகப்பெரிய ஆற்றலாக செமி கண்டக்டர்** துறை திகழ்கிறது என்று பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் செமிகான் இந்தியா 2025, 3-நாள் மாநாட்டை இன்று துவக்கிவைத்து பேசிய பிரதமர், இந்தியாவுடன் இணைந்து எதிர்காலத்திற்கான செமிகண்டக்டர் கட்டமைப்பை முன்னெடுத்துச் செல்ல உலகம் தயாராக உள்ளது என்றார்.

இத்துறையில் உலக நாடுகள் இந்தியா மீது பெரும் நம்பிக்கை வைத்திருப்பதாகவும் அவர் எடுத்துரைத்தார்.

உலகத்தில் மிகப்பெரிய மாற்றத்தை செமிகண்டக்டர் துறையின் சிறிய தகடு ஏற்படுத்தும் நாள் வெகுதொலைவில் இல்லை என்றும் பிரதமர் கூறினார்.

மின்னணு உலகின் வைரமாக குறைக்கடத்தி சில் உருவெடுத்துள்ளது என்றும் அவர் குறிப்பிட்டார்.

வருங்காலங்களில் ஒரு டிரில்லியன் டாலருக்கும் மேற்பட்ட வர்த்தகத்தை உலக குறைக்கடத்தி சந்தைகள் ஈட்டும் என்றும் நம்பிக்கை தெரிவித்த பிரதமர், இத்துறையில் இந்தியாவின் வேகம், உலகசந்தையில் ஒரு இன்றியமையா இடத்தை நமக்கு பெற்றுத்தரும் என்றும் குறிப்பிட்டார்.

2021-ம் ஆண்டு தொடங்கி நாட்டின் 10 செமி கண்டக்டர் திட்டங்களில், 18 பில்லியன் டாலர் முதலீடுகள் செய்யப்பட்டு உள்ளதாக கூறிய பிரதமர், அரியதாதுக்கள் தேவையை கருத்தில் கொண்டு இந்த இயக்கத்தில் இந்தியா செயலாற்றி வருவதாகவும் குறிப்பிட்டார்.

இது சார்ந்த அடுத்த தலைமுறைக்கான சீர்த்திருத்தங்களை மத்திய அரசு விரைவில் அறிவிக்கும் என்றார்.

சர்வதேச தேக்க நிலையின் மத்தியிலும் நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில் 7.8 சதவிகித ஆக்கப்பூர்வமான வளர்ச்சியை இந்தியா கண்டுள்ளதாக பிரதமர் பெருமிதம் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் துவக்கவுரையாற்றிய மத்திய மின்னணு தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் திரு. அஷ்விணி வைஷ்ணவ், நாட்டில் 5 செமிகண்டக்டர் அலகுகள் கட்டமைப்பு மிகதுரிதமாக நடைபெற்று வருவதாகவும், இரு அலகுகளின் உற்பத்தி இன்னும் சில மாதங்களில் தொடங்கும் என்றும் கூறினார்.

இந்தியாவில் தயரிக்கப்பட்ட முதலாவது சிப்பை பிரதமரிடம், திரு. அஷ்விணி வைஷ்ணவ் இந்நிகழ்வில் சமர்ப்பித்தார்.

இந்த 3 நாள் மாநாடு இந்தியாவின் குறைகடத்தி பிரிவிற்கு உத்வேகம் அளிப்பதுடன், மின்னணு உற்பத்தி, ஆராய்ச்சி மேம்பாடு, செயற்கை நுண்ணறிவு, முதலீட்டு வாய்ப்புகள், மாநிலங்களின் கொள்கை செயலாக்கம் போன்றவற்றை முன்னெடுத்து செல்லும் என எதிர்பார்க்கப்படுகிறது.

❖❖❖❖❖❖❖

**லாரன்ஸ் வாங்**

**சிங்கப்பூர் பிரதமர் லாரன்ஸ் வாங், 3 நாள்** அரசுமுறை பயணமாக இன்றுமாலை புதுதில்லி வருகிறார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி அவருடன் இருதரப்பு பேச்சுவார்த்தைகளை இன்று மேற்கொள்கிறார்.

இருநாடுகளுக்கிடையே திறன் மேம்பாடு, நிதி விமானம், விண்வெளி ஒத்துழைப்பு, கடல்சார் பிரிவுகளில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகவுள்ளன.

மத்திய அமைச்சர்கள் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர், திரு.தர்மேந்திர பிரதான் உள்ளிட்டோரையும் சிங்கப்பூர் பிரதமர் திரு.லாரன்ஸ் வாங் சந்தித்து பேசுகிறார்.

❖❖❖❖❖❖❖

**உலக தென்னை தினம்**

**உலக தென்னை தினம் இன்று கடைபிடிக்கப்** படுகிறது.

தென்னையின் பயன்கள் மற்றும் அதுசார்ந்த தொழிற்சாலைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த ஆண்டுதோறும் செப்டம்பர் 2-ம் தேதி இத்தினம் கொண்டாடப்படுகிறது.

பணப்பயிராக தென்னை பயிரிடப்படுகிறது என்று திருச்சி சிறுகமணியை சேர்ந்த தென்னை சாகுபடியாளர் திரு. சரவணன் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**அன்பில் மகேஷ் பொய்யாமொழி**

**ஆசிரியர் தகுதி தேர்வு TET தொடர்பான** உச்சநீதிமன்ற தீர்ப்பின் விவரங்கள் முழுமையாக வந்து சேர்ந்த பின்னர் அதுகுறித்து சட்ட வல்லுநர்களுடன் ஆலோசிக்கப்படும் என்று மாநில பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அமைச்சர், ஆசிரியர் தகுதி தேர்வில் தற்போது பணியில் உள்ள ஆசிரியர்கள், தேர்ச்சி பெறுவது கட்டாயம் என்ற உச்சநீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பாக ஆசிரியர் சங்கங்கள் மேல்முறையீடு செய்ய வாய்ப்புள்ளதாகவும் குறிப்பிட்டார்.

ஆசிரியர்களை எக்காரணத்தை கொண்டும் தமிழக அரசு கைவிடாது என்றும் அமைச்சர் கூறினார்.

**முன்னதாக நவராத்திரி பண்டிகையை முன்னிட்டு திருச்சி** சிங்காரதோப்பு பூம்புகார் விற்பனை நிலையத்தில் கொலு கண்காட்சியை அவர் தொடங்கிவைத்தார்.

❖❖❖❖❖❖❖

**சேகர்பாபு**

**சென்னை பூவிருந்தவல்லியை அடுத்த** குத்தம்பாக்கம் புதிய பேருந்து நிலையம் நவம்பர் மாத இறுதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்படும் என்று, சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும தலைவர் திரு.சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

குத்தம்பாக்கம் பகுதியில் 414 கோடி ரூபாய் மதிப்பில் அமைக்கப்படும் பேருந்து நிலைய பணிகளை, அமைச்சர் திரு.நாசருடன் இன்று ஆய்வு செய்த அவர், கட்டுமான பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளை அறிவுறுத்தினார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**இருவரி**

**கள்ளக்குறிச்சி மாவட்டத்தில்** வரும் 12-ம் தேதி நடைபெறவுள்ள சிறுபான்மையினர் நல ஆய்வுக்கூட்டத்தில் பொதுமக்கள் பங்கேற்று தங்களது கருத்துக்களை தெரிவிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

**திருப்பத்தூர் மாவட்ட வேலைவாய்ப்பு தொழில்நெறி** வழிகாட்டு மையத்தில் சீருடைபணியாளர் தேர்விற்கான இலவச பயிற்சி வகுப்புகள் நாளை மறுநாள் தொடங்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திருமதி. சிவ சவுந்தர வள்ளி தெரிவித்துள்ளார்.

**சிவகங்கை மாவட்டத்தை சேர்ந்த பிற்படுத்தப்பட்ட** மிகவும் பிற்படுத்தப்பட்ட சீர்மரபினர் வகுப்பினை சேர்ந்த மாணாக்கர் கல்வி உதவித்தொகை பெற இம்மாத இறுதிக்குள் விண்ணப்பிக்கலாம் என்று ஆட்சித்தலைவர் திருமதி. பொற்கொடி கூறியுள்ளார்.

**ஈரோடு மாவட்ட எய்ட்ஸ் தடுப்பு, கட்டுப்பாட்டு** அலகின் சார்பில் கல்லூரி மாணாக்கர் பங்கேற்ற மாவட்ட அளவிலான விழிப்புணர்வு மாரத்தான் போட்டி இன்று நடைபெற்றது.

**நாகை வேளாங்கண்ணி புனித ஆரேக்கியமாதா** திருவிழாவின் முக்கிய நிகழ்வான மாதாவின் பிறந்தநாளை ஒட்டி வரும் 8-ம் தேதி மாவட்டத்திற்கு உள்ளூர் விடுமுறை விடப்பட்டுள்ளதாக ஆட்சித்தலைவர் திரு.ஆகாஷ் தெரிவித்துள்ளார்.

இதற்கு பதில் வரும் 20-ம் தேதி வேலைநாளாக இருக்கும்.

❖❖❖❖❖❖❖

**கன்னியாகுமரி வாய்ஸ்**

**ஓணம் பண்டிகையையொட்டி கன்னியாகுமரி** மாவட்டம் தோவாளை மலர்ச்சந்தையில் பூக்களின் விலை மற்றும் விற்பனை அதிகரித்துள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. **வாய்ஸ்** ..

❖❖❖❖❖❖❖

**மதுரை வாய்ஸ்**

மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் ஆவணி மூலத்திருவிழாவில் **பிட்டுக்கு மண் சுமந்த நிகழ்வு** நாளை நடைபெறுகிறது.

இதுகுறித்து எமது செய்தியாளர்.

**.. வாய்ஸ் ..**

❖❖❖❖❖❖❖

**மேட்டூர்**

மேட்டூர் அணை அதன் முழு கொள்ளளவான 120 அடியாக 6-வது முறையாக இந்த ஆண்டு மீண்டும் எட்டியுள்ளது.

அணையிலிருந்து 35 ஆயிரம் கனஅடி தண்ணீர் விடுவிக்கப்படுகிறது.

**ஒகேனக்கல் காவிரி ஆற்றில் நீர்வரத்து** 43 ஆயிரம் கனஅடியாக இன்று அதிகரித்துள்ளது.

❖❖❖❖❖❖❖

**பேட்மிட்டன்**

**சீன மாஸ்டர்ஸ் பேட்மிட்டன் போட்டிகள் இன்று தொடங்குகிறது.**

பவோஜி நகரில் நடைபெறவுள்ள இப்போட்டியின் ஆடவர் ஒற்றையர் முதல்சுற்றில் இந்தியாவின் Ginpaul Sonna, இங்கிலாந்தின் Yuehang Wang-ஐ இன்று எதிர்கொள்கிறார்.

❖❖❖❖❖❖❖

**இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.**

❖❖❖❖❖❖❖